கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) தென்காசி

முன்னிலை:- திருமதி.கோ. அனுராதா, L.L.M., M.L.S.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2022**

மற்றும்

**இடைநிலை மனு எண்.7/2022**

அதன்

**அசல் வழக்கு எண்.120/2022**

**இடைநிலை மனு எண்.3/2022**

சண்முகையா ... மனுதாரர்/வாதி

..எதிர்..

வேலுச்சாமி ... எதிர்மனுதாரர்/8 ஆம் பிரதிவாதி

**இடைநிலை மனு எண்.7/2022**

வேலுச்சாமி ... மனுதாரர்/8 ஆம் பிரதிவாதி

..எதிர்..

சண்முகையா ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த இடைநிலை மனுக்கள் இரண்டும் கடந்த 06.09.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது இடைநிலை மனு எண்.3/2022 மனுவின் மனுதாரர் மற்றும் இடைநிலை மனு எண்.7/2022-ன் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.C. விநாயகராஜன் அவர்களும், இடைநிலை மனு எண்.3/2022 மனுவின் எதிர்மனுதாரர் மற்றும் இடைநிலை மனு எண்.7/2022-ன் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C. ஜேசுதாஸ் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>பொது உத்தரவு</u>

**இடைநிலை மனு எண்.3/2022**

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ், மனு 1வது தபசில் சொத்தில் உள்ள மனுதாரரின் அனுபவத்தை எதிர்மனுதாரரோஅவரது வேலையாட்களோ, வகையாட்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு மேற்படியார்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இம்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது மனுதாரருக்கு 1வது தபசில் சொத்தில் வழக்கு முன்னுரிமை உண்டு என விளம்புகை செய்யக் கோரியும், பிராது 1வது தபசில் சொத்தைப் பொறுத்து 1 முதல் 7 பிரதிவாதிகள் ரூ.7,54,763/- மதிப்பிற்கு கிரையப் பத்திரத்தினை மனுதாரர் பெயருக்கு நிறைவேற்றித் தர உத்தரவிடக் கோரியும், பிராது 2வது தபசில் சொத்தைப் பொறுத்து, 4 முதல் 7 பிரதிவாதிகள், 8 ஆம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கெடுத்துள்ள 22.02.2022 தேதிய கிரையப் பத்திரத்தையும், பிராது 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் 8 ஆம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள 22.02.2022 தேதிய கிரையப் பத்திரத்தையும் ரத்து செய்து உத்தரவிடக்கோரியும், பிராது 1வது தபசில் சொத்தில் உள்ள மனுதாரர்/வாதியின் அனுபவத்தை 8 ஆம் பிரதிவாதியோ அவரது வேலையாட்களோ, வகையாட்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. தபசில் 1, 2 அயிட்டச் சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனாரான மூக்கையா என்பவரால் 27.08.1983 மற்றும் 17.11.1986 தேதிகளிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரங்கள் மூலமாக கிரையம் பெறப்பட்டவை. இதரச் சொத்துக்கள் மூக்கையாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. மூக்கையாவின் மனைவி மூக்கையாவின் இறப்பிற்கு முன்னதாக இறந்துவிட்டார். மூக்கையாவும் தபசில் சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் அவரது மக்களான மனுதாரர், திருச்செல்வம், முத்துசாமி மற்றும் ராமையா ஆகியோர்களை அவரது அடுத்த வாரீசுகளாக விட்டு விட்டு கடந்த 13.09.1997-ல் இறந்துபோய்விட்டார். எனவே தபசில் சொத்தில் மனுதாரர் மற்றும் மேற்சொன்ன நபர்களுக்கு தலா 1/4 பாகம் பாத்தியப்பட்டதாகும். மேற்படி வாரீசுகளில் திருச்செல்வம் என்பவர் 1, 2 பிரதிவாதிகளை அவரது வாரீசுகளாக விட்டு விட்டு 1998 ஆம் வருடம் காலமாகிவிட்டார். அதுபோன்று முத்துசாமி என்பவர் 3 ஆம் பிரதிவாதியை அவரது வாரீசாக விட்டுவிட்டு 2021 ஆம் வருடம் காலமாகிவிட்டார். ராமையா என்பவர் 4 முதல் 7 பிரதிவாதிகளை அவரது வாரீசுகளாக விட்டு விட்டு 12.10.2014 ஆம் தேதியன்று காலமாகிவிட்டார். மேற்படி சகோதரர்கள் உயிருடன் இருந்த காலத்தில், பிராது தபசில் சொத்தானது பூர்வீகச் சொத்து என்பதால், கிரையம் பெறும்

முன்னுரிமை குறித்து சகோதரர்களுக்குள் ஒரு வாய்மொழி ஒப்பந்தமானது 1997 ஆம் வருடத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. மேற்கண்ட சகோதரர்கள் இறந்தபின்னர் அவரது வாரீசுகளான 1 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களுக்குரிய 3/4 பாகத்தை பிரித்துக்கொண்டு தனித்து அனுபவித்து வந்தனர். அதன்பின்னர் பிரதிவாதிகள் 1, 2 மற்றும் 4 முதல் 7 ஆகியோர் மும்பையில் வசித்து வந்ததால் பிராது தபசில் சொத்துக்களானது கடந்த 14 வருடங்களாக இந்த மனுதாரரின் தனித்த அனுபவத்தில் இருந்து வந்தது. மனுதாரர் பிராது தபசில் சொத்தில் நெல் பயிரிட்டு வந்து, பலன்களை 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் கொடுத்து வந்தார். இந்நிலையில், 1 ஆம் பிரதிவாதி, அவரது சகோதரியான 2 ஆம் பிரதிவாதியின் சம்மதத்தின்பேரில் தபசில் சொத்தில் அவருக்குரிய 1/4 பாகத்தைப் பொறுத்து இந்த மனுதாரருக்கு கிரையம் தருவதாக ஒப்புக்கொண்டு 23.03.2011 ஆம் தேதியன்று மனுதாரரின் மகனுடன் ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு ரூ.81,500/-ஐ மனுதாரரிடம் பெற்றுக் கொண்டிருக்கிறார். அவ்வாறே 4 முதல் 7 பிரதிவாதிகளும், மனுதாரருடன் கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு விட்டு தற்போது அதனை மறுத்து கட்சி செய்கின்றனர். 8 ஆம் பிரதிவாதியும், அவரது வகையாளான சந்தானம் என்பவரும், 7 வது பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில், தபசில் சொத்தில் உள்ள மனுதாரரின் அனுபவத்தை 26.10.2021 அன்று இடையூறு செய்ய முற்பட்டனர். எனவே மனுதாரரின் மகன் முத்துராமன் என்பவர் 8 ஆம் பிரதிவாதி/எதிர்மனுதாரருக்கு எதிராக ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற வழக்கு எண்.665/2021 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர் ஏற்கனவே ஒப்பந்தத்தின் மூலமாக தபசில் சொத்தைப் பொறுத்து கிரையம் வாங்கும் முன்னுரிமை பெற்றிருப்பதால், பிராது 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து, 4 முதல் 7 பிரதிவாதிகள், 8 ஆம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கெடுத்துள்ள 22.02.2022 தேதிய கிரையப் பத்திரமும், பிராது 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் 8 ஆம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள 22.02.2022 தேதிய கிரையப் பத்திரமும் சட்டப்படி செல்லக் கூடியதல்ல. மேற்படி ஆவணங்கள் தபசில் சொத்தில் உள்ள இந்த மனுதாரரின் அனுபவத்தை கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல. தபசில் சொத்துக்கள் நாளது தேதி வரை பாகம் பிரிக்கப்படாமல் மனுதாரரின் தனித்த அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. மேற்படி கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் 8 ஆம் பிரதிவாதி/எதிர்மனுதாரர், மனுதாரரின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறார். எனவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுச் சங்கதிகள் உண்மையானவைகள் இல்லை. தபசில் சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனாரான மூக்கையா என்பவரால் 27.08.1983 மற்றும் 17.11.1986 தேதிகளிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரங்கள் மூலமாக கிரையம் பெறப்பட்டு அனுபவித்து வரப்பட்டு, பின்னர் அவர் அவரது மக்களான மனுதரர், செல்வம், முத்துசாமி மற்றும் ராமையா ஆகியோர்களை விட்டு விட்டு காலமாகிவிட்டார் என்பதும், அதன்பின்னர் தபசில் சொத்துக்களை மனுதாரர், இறந்துபோன செல்வத்தின் வாரீசுகளான முத்துலெட்சுமி, செல்வராஜ், முத்துசாமி மற்றும் ராமையா ஆகியோர் பாகப்பிரிவினை செய்து

கொண்டு அனுபவித்து வந்தனர். மேற்படியார்களில் ராமையா என்பவர் அவரது மனைவியான பரமேஸ்வரி, மகள்கள் மாதவி, சாந்தி மற்றும் மகன் முத்து அருள் கண்ணன் ஆகியோர்களையும், செல்வம் என்பவர் அவரது மக்களான முத்துலெட்சுமி, செல்வராஜ் ஆகியோர்களையும், முத்துசாமி என்பவர் அவரது மக்களான முத்தமிழ்ச்செல்வன், கணேசன், அமுதா, முத்துலட்சுமி ஆகியோர்களையும் அவர்களது வாரீசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டனர். அதன்பின்னிட்டு தபசில் சொத்துக்களை மனுதாரர் மேற்கண்ட வாரீசுதாரர்களுடன் சேர்ந்து அனுபவித்து வந்ததில், முத்துசாமியின் வாரீசுகள் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தை இந்த எதிர்மனுதாரர் பெயருக்கு 31.03.2021-ல் ஒரு அனுபவ யாதாஸ்து மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்தனர். அதுபோன்று செல்வம் என்பவரின் வாரீசுகள் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து 22.02.2022 ஆம் தேதிய கிரையப் பத்திரத்தின் மூலம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டனர். ராமையா என்பவரின் வாரீசுகளும் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து 22.02.2022 ஆம் தேதிய கிரையப் பத்திரத்தின் மூலம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டனர். மேற்படி காலம் முதல் எதிர்மனுதாரர் தபசில் சொத்தில் 3/4 பங்குரிமை பெற்று சர்வசுதந்திரமாக அனுபவித்து வருகிறார். மனுதாரருக்கு பிராது தபசில் சொத்தைப் பொறுத்து எவ்வித முன்னுரிமையும் கிடையாது. மேலும் எதிர்மனுதாரர் அனுபவித்து வரும் சொத்தில் மனுதாரர் அத்துமீறி நுழைந்து எதிர்மனுதாரரின் சொத்தை சேதப்படுத்தியுள்ளார். மனுதாரரின் மனுவிற்கு முதல் தோற்ற வழக்கோ, நீதியின் அளவுகோலோ, சமநிலை பரிகாரமோ கிடையாது. எனவே மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. <u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையின் சுருக்கம்</u>:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுச் சங்கதிகள் உண்மையானவைகள் இல்லை. உண்மையில் 2 ஆம் பிரதிவாதியும் அவரது உடன்பிறந்த சகோதரியான 1 ஆம் பிரதிவாதியும் அவரது அப்பா திருச்செல்வம் என்பவரிடமிருந்து கிடைக்கப் பெற்ற சொத்துக்களை 8 ஆம் பிரதிவாதியிடம் 01.10.2021 அன்று கிரைய ஒப்பந்தம் செயது 22.02.2022 ஆம் தேதியன்று கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டனர். மேலும் மனுதாரர்/வாதியின் சகோதரர்களில் ஒருவரான முத்துசாமிக்கு வாரீசுகளாக முத்தமிழ்செல்வன், கணேசன் ஆகிய இரு ஆண் மக்களும், அமுதா, லெட்சுமி, 3 ஆம் பிரதிவாதி ஆகிய 3 பெண் மக்களும் முனியம்மாள் என்ற மனைவியும் சட்டப்படியான வாரீசுகளாக இருந்தும், மனுதாரர் 3 ஆம் பிரதிவாதியை மட்டும் முத்துசாமியின் வாரீசாக காட்டி உண்மை பொருண்மைகளை மறைத்துள்ளார். மேலும், 1வது தபசில் சொத்துக்களில் எதிர்கோரிக்கை தபசில் சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களில் பல்வேறு நபர்களுக்கு உரிமை உள்ளதாக வில்லங்க பதிவுகள் உள்ள நிலையில் அந்தச் சொத்துக்களின் உண்மை நிலையையும் மனுதாரர் மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதியின் சகோதரர்களில் ஒருவரான முத்துசாமி என்பவரின் வாரீசுகள் முத்துசாமிக்கு பாத்தியப்பட்ட இந்த எதிருரை 1வது தபசில் சொத்தைப் பொறுத்து, அவர்கள் எதிர்மனுதாரரிடம் பெற்ற கடனுக்கு ஈடாக அனுபவ யாதாஸ்து ஒன்றை பிறப்பித்துக் கொடுத்துள்ளதன் மூலம் எதிர்மனுதாரர் அந்தச் சொத்தில் தொடர்ந்து பயிர் செய்து வருகிறார்.

மேலும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்த எதிருரை 2 ஆம் தபசில் சொத்தைப் பொறுத்து மனுதாரரின் மகன் முத்துராமன் என்பவர் 4 முதல் 7 பிரதிவாதிகளுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார். பின்னிட்டு அதில் பிரச்சனை ஏற்பட்டு ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததில், கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து, முன் பணத் தொகையை மேற்படி முத்துராமன் திரும்பப் பெற்றுள்ளார். அதன்பின்னிட்டு எதிருரை 2 ஆம் தபசில் சொத்தைப் பொறுத்து 4 முதல் 7 பிரதிவாதிகள் இந்த எதிர்மனுதாரருக்கு அனுபவத்தை ஒப்படைத்து, எதிர்மனுதாரர் பெயரில் பட்டா ஏற்பட்டு, இந்த எதிர்மனுதாரர் தீர்வை செலுத்தி விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார். அதுபோன்று எதிருரை 3 ஆம் தபசில் சொத்தை 1, 2 பிரதிவாதிகள் இந்த எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டனர். மேற்கண்டவாறு எதிருரை 3 தபசில் சொத்துக்களையும் எதிர்மனுதாரர் சட்டப்படி பெற்று அனுபவித்து வரும் நிலையில் எதிர்மனுதாரர் மீது, மனுதாரரும் அவரது மகன் முத்துராமன் என்பவரும் சேர்ந்து காவல்நிலையத்தில் பொய்ப்புகார் கொடுத்து இடையூறு செய்தனர். வாங்கும் முன்னுரிமை என்ற அடிப்படையில் மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கக் கூடியதல்ல. வாங்கும் முன்னுரிமை மனுதாரருக்கு உள்ளதா? இல்லையா? என்பது குறித்து அசல் வழக்கு விசாரணைக்குப் பின்னர் தான் முடிவு செய்ய முடியும். மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சட்டப்படியான உரிமையுள்ள 1,2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளிடமிருந்து எதிர்மனுதாரர் கிரையம் வாங்கி சட்டபூர்வமாக அனுபவித்து வரும் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமோ, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமோ கோர இயலாது. எனவே மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இடைநிலை மனு எண்.7/2022</u>**

6. இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் பிரிவு 151-ன் கீழ், மனு தபசில் சொத்துக்களில் மனுதாரர் கிரையதாரர் என்ற சட்டபூர்வமான உரிமையாளர் என்ற அடிப்படையில் அமைதியான முறையில் பயிர் செய்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரரோ அவரது வேலையாட்களோ, வகையாட்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு மேற்படியார்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. **<u>மனுவின் சுருக்கம்</u>**:-

தபசில் சொத்துக்கள் எதிர்மனுதாரரின் தகப்பனாரான மூக்கையா என்பவரால் 27.08.1983 மற்றும் 17.11.1986 தேதிகளிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரங்கள் மூலமாக கிரையம் பெறப்பட்டு அனுபவித்து வரப்பட்டு, பின்னர் அவர் அவரது மக்களான மனுதரர், செல்வம், முத்துசாமி மற்றும் ராமையா ஆகியோர்களை விட்டு விட்டு காலமாகிவிட்டார் என்பதும், அதன்பின்னர் தபசில் சொத்துக்களை எதிர்மனுதாரர், இறந்துபோன செல்வத்தின் வாரீசுகளான முத்துலெட்சுமி, செல்வராஜ், முத்துசாமி மற்றும் ராமையா ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்டு அனுபவித்து வந்தனர். மேற்படியார்களில் ராமையா என்பவர் அவரது மனைவியான பரமேஸ்வரி, மகள்கள் மாதவி, சாந்தி மற்றும் மகன் முத்து அருள் கண்ணன் ஆகியோர்களையும், செல்வம்

என்பவர் அவரது மக்களான முத்துலெட்சுமி, செல்வராஜ் ஆகியோர்களையும், , முத்துசாமி என்பவர் அவரது மக்களான முத்தமிழ்ச்செல்வன், கணேசன், அமுதா, முத்துலட்சுமி ஆகியோர்களையும் அவர்களது வாரீசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டனர். அதன்பின்னிட்டு தபசில் சொத்துக்களை எதிர்மனுதாரர் மேற்கண்ட வாரீசுதாரர்களுடன் சேர்ந்து அனுபவித்து வந்ததில், முத்துசாமியின் வாரீசுகள் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தை இந்த மனுதாரர் பெயருக்கு 31.03.2021-ல் ஒரு அனுபவ யாதாஸ்து மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்தனர். அதுபோன்று செல்வம் என்பவரின் வாரீசுகள் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து 22.02.2022 ஆம் தேதிய கிரையப் பத்திரத்தின் மூலம் மனுதாரருக்குப் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டனர். ராமையா என்பவரின் வாரீசுகளும் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து 22.02.2022 ஆம் தேதிய கிரையப் பத்திரத்தின் மூலம் மனுதாரருக்குப் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டனர். மேற்படி காலம் முதல் மனுதாரர் தபசில் சொத்தில் 3/4 பங்குரிமை பெற்று சர்வசுதந்திரமாக அனுபவித்து வருகிறார். மனுதாரர்/வாதியின் சகோதரர்களில் ஒருவரான முத்துசாமி என்பவரின் வாரீசுகள் முத்துசாமிக்கு பாத்தியப்பட்ட இந்த எதிருரை 1வது தபசில் சொத்தைப் பொறுத்து, அவர்கள் மனுதாரரிடம் பெற்ற கடனுக்கு ஈடாக அனுபவ யாதாஸ்து ஒன்றை பிறப்பித்துக் கொடுத்துள்ளதன் மூலம் மனுதாரர் அந்தச் சொத்தில் தொடர்ந்து பயிர் செய்து வருகிறார். மேலும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்த 2 ஆம் தபசில் சொத்தைப் பொறுத்து மனுதாரரின் மகன் முத்துராமன் என்பவர் 4 முதல் 7 பிரதிவாதிகளுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார். பின்னிட்டு அதில் பிரச்சனை ஏற்பட்டு ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததில், கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து, முன் பணத் தொகையை மேற்படி முத்துராமன் திரும்பப் பெற்றுள்ளார். அதன்பின்னிட்டு 2 ஆம் தபசில் சொத்தைப் பொறுத்து 4 முதல் 7 பிரதிவாதிகள் இந்த மனுதாரருக்கு அனுபவத்தை ஒப்படைத்து, மனுதாரர் பெயரில் பட்டா ஏற்பட்டு, இந்த மனுதாரர் தீர்வை செலுத்தி விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார். அதுபோன்று எதிருரை 3 ஆம் தபசில் சொத்தை 1, 2 பிரதிவாதிகள் இந்த எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டனர். மேற்கண்டவாறு 3 தபசில் சொத்துக்களையும் மனுதாரர் சட்டப்படி பெற்று அனுபவித்து வரும் நிலையில் மனுதாரர் மீது, மனுதாரரும் அவரது மகன் முத்துராமன் என்பவரும் சேர்ந்து காவல்நிலையத்தில் பொய்ப்புகார் கொடுத்து இடையூறு செய்தனர். எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சட்டப்படியான உரிமையுள்ள 1,2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளிடமிருந்து மனுதாரர் கிரையம் வாங்கி தென்னை வாழை, நெல் பயிர் செய்து பைப்லைன் பதித்து தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வரும் மனுதாரரின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர் அவரது மகன்கள் உள்பட வகையாள் மூலம் மனுதாரருக்கு 06.04.2022 தேதி முதல் இடையூறு செய்து ரூ.1,31,000/-சொத்தழிப்பு செய்து நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரருக்கு தபசில் சொத்துக்களில் முதல்நிலை வழக்கு உள்ளது. எதிர்மனுதாரர், மனுதரரின் அனுபவத்திற்கு இடையூறு செய்து மிரட்டியும் வருகிறார். எனவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. **<u>எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செலல்லக் கூடியதல்ல. எதிர்மனுதாரருக்கு தபசில் சொத்தைப் பொறுத்து வாங்கும் முன்னுரிமை உள்ளது. தபசில் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் என்பதால் எதிர்மனுதாரருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் இடையே 1997 ஆம் ஆண்டு தபசில் சொத்தைப் பொறுத்து வாங்கும் முன்னுரிமை குறித்த ஒப்பந்தமானது ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. மனுத் தபசில் சொத்தானது எதிர்மனுதாரரின் தனித்த அனுபவத்திலும் ஆளுகையிலும் இருந்து வருகிறது. தபசில் சொத்தில் எதிர்மனுதாரர் நெல் பயிரிட்டு சாகுபடி செய்து வருகிறார். மனு 2 ஆம் தபசில் சொத்தைப் பொறுத்து 4 முதல் 7 பிரதிவாதிகள் மனுதாரருக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக கூறுவது உண்மையல்ல. மனுதாரர் பெயரில் உள்ள பட்டா மற்றும் கிரையப் பத்திரங்கள் ஆகியவை சட்டப்படி செல்லக் கூடிய ஆவணங்கள் இல்லை. மேற்படி ஆவணங்கள் தபசில் சொத்தில் உள்ள எதிர்மனுதாரரின் உரிமையை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல. தபசில் சொத்துக்கள் இதுநாள் வரை பாகப்பிரிவினை செய்யப்படாமல் எதிர்மனுதாரரின் தனித்த அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வருகிறது. கிரையப் பத்திரங்கள் மற்றும் பட்டா போன்ற ஆவணங்களின் மூலம் சொத்து பரிமாற்றங்கள் ஏற்பட்ட பின்னர் வாங்கும் முன்னுரிமையானது மறுக்கப்பட இயலாது. எனவே மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

9. இந்த இரண்டு மனுக்களிலும் ஒரே தரப்பினர்கள் என்பதாலும், தபசில் சொத்துக்களும் ஒரே சொத்துக்கள் என்பதாலும், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் ஒன்று என்பதாலும், இரு மனுக்களுக்கும் சேர்த்து பொது உத்தரவு பகரப்படுவது நீதிக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. இம்மனுக்களில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால்

1. இடைநிலை மனு எண்.3/2022 'மனு அனுமதிக்கக் கூடியதா?'

2. இடைநிலை மனு எண்.7/2022 'மனு அனுமதிக்கக் கூடியதா?'

11. இடைநிலை மனு எண்.3/2022 மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.29 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இடைநிலை மனுஎண்.7/2022 மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. எ.ம.சா.ஆ.1 முதல் எ.மசா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. **<u>பிரச்சனைகள் 1 மற்றும் 2-ற்கான தீர்வு</u>**:-

இந்த மனுக்களில் பிறப்பிக்கப்படும் உத்தரவின் வசதி கருதி, இடைநிலை மனு எண். 3/2022-ன் மனுதாரர், மனுதாரர் என்றும், மேற்படி மனுவின் எதிர்மனுதாரர், எதிர்மனுதாரர் என்றும்

அழைக்கப்படுவார்கள்.

13. இம்மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கினை பிராது தபசில் சொத்தில் தனக்கு வாங்கும் முன்னுரிமை (Preemption) உள்ளது என்று விளம்புகை செய்யவும், மற்றும் ஆவணங்களை ரத்து செய்யவும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்திருக்கிறார். மனு 1, 2 அயிட்டச் சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனாரான மூக்கையா என்பவருக்கு 27.08.1983 மற்றும் 17.11 1986 தேதியிட்ட கிரைய ஆவணங்கள் வாயிலாக பாத்தியப்பட்டவை. மற்ற சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் ஆகும். தகப்பனாரான மூக்கையா 13.09.1997-ல் இந்த மனுதாரரையும் அவரது மற்ற மகன்களான திருச்செல்வம், முத்துசாமி, ராமையா ஆகியோர்களை வாரீசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார். எனவே ஒவ்வொரு வாரீசுகளுக்கும் 1/4 பாகம் கிடைக்கத்தக்கதாகும், இந்த நிலையில் திருச்செல்வம் 1998-ல் 1, 2 பிரதிவாதிகளை வாரீசுகளாக விட்டு விட்டும், முத்துசாமி 2021-ல் 3 ஆம் பிரதிவாதியை வாரீசாக விட்டு விட்டும், ராமையா 12.10.2014-ல் 4 முதல் 7 பிரதிவாதிகளை வாரீசுகளாக விட்டு விட்டும் இறந்துவிட்டனர். தபசில் சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் என்பதால் மனுதாரரின் சகோதரர்கள் உயிருடன் இருக்கும் காலத்திலேயே மனுதாரருக்கு வாங்கும் முன்னுரிமை இருப்பதை மனுதாரர் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதன் அடிப்படையில் 1997-ல் மனுதாரருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் இடையே வாய்மொழியாக தபசில் சொத்துக்களை மனுதாரருக்கு கிரையம் செய்ய வேண்டுமென்ற ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் 1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் மும்பையில் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக வசித்து வருகிறார்கள். இதன் அடிப்படையில் கடந்த 16 ஆண்டுகளாக தபசில் சொத்துக்கள் மனுதாரரின் அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வருகிறது. தபசில் சொத்துக்களில் நெல் சாகுபடி செய்து 1 முதல் 7 பிரதிவாதிகள் ஊருக்கும் வரும் காலங்களில் அவற்றை பங்கிட்டு கொடுத்திருக்கிறார். இந்த நிலையில் 1 ஆம் பிரதிவாதி அவருடைய சகோதரரான 2 ஆம் பிரதிவாதியின் சம்மதத்துடன் இந்த மனுதாரரிடமிருந்து ரூ.81,500/-ஐ பெற்றுக்கொண்டு அவருடைய 1/4 பாகத்தை விற்பதற்கு இந்த மனுதாரரின் மகனிடம் 23.03.2011-ல் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறார். 4 முதல் 7 பிரதிவாதிகளும் அவ்வாறே கிரையம் செய்வதற்காக ஒப்பந்தம் ஏற்படுத்தி பின்பு பேராசையின் காரணத்தினால், அதை மறுத்துவிட்டார்கள். இந்நிலையில் 8 ஆம் பிரதிவாதியானவர் அவருடைய வகையாளான சந்தானம் என்பவருடன் சேர்ந்து 7 ஆம் பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் இந்த மனுதாரரின் அனுபவத்திற்கு 26.10.2021-ல் இடையூறு ஏற்படுத்தினார். இதனால் மனுதாரரின் மகனான முத்துராமன் என்பவர் காவல்நிலையத்தில் புகார் செய்ததன்பேரில் ஆலங்குளம் காவல்நிலையத்தில் குற்ற எண்.665/2021-ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த மனுதாரருக்கு தபசில் சொத்துக்களில் முன்னுரிமை இருக்கின்ற நிலையில் இந்த எதிர்மனுதாரர் 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து 22.02.2022-ல் அவர்களுடைய பாகத்தையும், அதே தேதியில் 4 முதல் 7 பிரதிவாதிகளின் பாகத்தையும், மற்றொரு கிரைய ஆவணத்தின் வாயிலாக கிரையம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு இந்த கிரையப் பத்திரங்களில் கூறப்பட்டுள்ள சொத்துக்கள் 2 ஆம் தபசில் சொத்தாக விவரிக்கப்பட்டுள்ளது. இந்த கிரைய

ஆவணங்கள் சட்டத்தின்பால் செல்லத்தக்கதல்ல. மற்றும் இந்த மனுதாரரைக் கட்டுப் படுத்தக் கூடியதல்ல. நாளது தேதி வரை தபசில் சொத்துக்களில் பாகப்பிரிவினை எதுவும் ஏற்படாத நிலையில் எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களுக்கு அந்நியர் என்பதால் அவருக்கு தபசில் சொத்துக்களில் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை. இந்த மனுதாரர் 1, 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளின் பங்கிற்கான தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்திருக்கிறார். எதிர்மனுதாரர், தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 1 முதல் 4 ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள். மற்ற ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. எனவே 1 ஆம் தபசில் சொத்தில் உள்ள இந்த மனுதாரரின் உரிமையையும், அனுபவத்தையும் இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியது அவசியம் என்றும், மனுதாரருக்கு முதல்நோக்கு வழக்கும், சமநிலை நோக்கும் இருக்கிறது. மேலும், மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த எதிர்மனுதாரர், மனு தாக்கல் செய்த பின்பும் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தியதால் இந்த மனுதாரரால் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு புகார் ஏற்பு மனு ரசீதுகள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே மனுவை அனுமதிக்க வேண்டுமென்று வாதிட்டிருக்கிறார்.

14. எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் தாக்கல் செய்த ம.சா.ஆ.5-ல் அந்த ஆவணம் எழுதப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை. மேலும், அதிலுள்ள கையெழுத்துக்கள் மனுதாரரால் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இந்த மனுதாரர் தபசில் சொத்தின் அனுபவத்தில் இருந்தார் என்பதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் 3 ஆம் பிரதிவாதிக்கு ஒரே ஒரு வாரீசு இருப்பதாக மனுதாரர் தெரிவித்திருக்கிறார் அது உண்மையல்ல. அவர் நீதிமன்றத்தில் உண்மை விவரங்களை மறைத்திருக்கிறார். முத்துசாமிக்கு முத்தமிழ்ச்செல்வன், கணேசன், அமுதா, லெட்சுமி, 3 ஆம் பிரதிவாதி ஆகியோர் வாரீசுகள் ஆவார்கள். அவர்களில் ஆண்வாரீசுகளான முத்தமிழ்ச்செல்வன் மற்றும் கணேசன் ஆகியோர்கள் 31.03.2021-ல் மூன்று வருடத்திற்கு பயிர் செய்துகொள்ளும், அனுபவ யாதாஸ்த்தை 1 ஆம் தபசில் சொத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். ஏற்கனவே 02.04.1997 ல் இந்த மனுதபசில் சொத்துக்கள் மற்றும் வீடுகள், வீட்டு மனைகள், உட்பட அனைத்து சொத்துக்களும் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையல் மேலே கூறியவாறுமுத்துசாமியின் வாரீசுகள் அனுபவ யாதாஸ்தை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் 4 முதல் 7 பிரதிவாதிகளும் 13.10.2019 தேதியில் மனுதாரருடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக கூறப்பட்டு பெறப்பட்ட அட்வான்ஸ் தொகையான ரூ.9,11,000/-ஐ உடனடியாக மனுதாரரின் மகன் முத்துராமன் திரும்பக் கேட்டவுடன் இந்த 4 முதல் 7 பிரதிவாதிகள் இந்த எதிர்மனுதாரரை அணுகி 2 ஆம் தபசில் சொத்தை ரூ.18,00,000/-ற்கு கிரையம் பேசி முன் தொகையாக ரூ.11,00,000/-ஐ இந்த எதிர்மனுதாரரிடம் பெற்றுக்கொண்டு 19.07.1921-ல் 2 ஆம் தபசில் சொத்தைப் பொறுத்து இந்த எதிர்மனுதாரருக்கு கிரைய ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த தொகையில் ரூ.9,11,000/-ஐ 4 முதல் 7 பிரதிவாதிகள் 20.07.2021 ஆம் தேதி மனுதாரரின் மகனிடத்தில் திரும்ப ஒப்படைத்து, அதே தேதியில் ஒரு உறுதிமொழி ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்தப்

பிரமாண பத்திரமும் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பின்பு 4 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட 2 ஆம் தபசில் சொத்தை எதிர்மனுதாரரிடத்தில் அனுபவத்தை ஒப்படைத்த பின்பு எதிர்மனுதாரரே தபசில் சொத்துக்களில் தண்ணீர் பைப் லைன்கள் பதித்து பயிர் செய்து அனுபவம் செய்து வந்தார். அதன்பின்பு 22.02.2022 ஆம் தேதியன்று கிரைய ஆவணத்தை 4 முதல் 7 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். 1 ஆம் பிரதிவாதிக்கும், அவருடைய சகோதரரான 2 ஆம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட 3 ஆம் தபசில் சொத்தை ரூ.18,00,000/-ற்கு கிரையம் பேசி 2 ஆம் பிரதிவாதி ரூ.6,00,000/- முன் பணமாக பெற்றுக்கொண்டு 3 ஆம் தபசில் சொத்தை எதிர்மனுதாரரிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். அதன் அடிப்படையில் பாக்கி கிரையத் தொகையான ரூ.12,00,000/.ஐ ரொக்கமாக பெற்றுக்கொண்டு 22.02.2022-ல் 1, 2 பிரதிவாதிகள் இந்த எதிர்மனுதாரருக்கு கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுத்திருக்கிறார்கள். எனவே 3 ஆம் தபசில் சொத்திற்கும் கிரையதாரர் என்ற நிலையில் எதிர்மனுதாரர் பட்டா பெற்று தீர்வைகள் செலுத்தி முழு உரிமையாளராக 3 ஆம் தபசில் சொத்தின் அனுபவத்திலும், உரிமையிலும் இருந்து வருகிறார். எனவே 3 ஆம் தபசில் சொத்தும் எதிர்மனுதாரரின் உரிமையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. இதனை இடையூறு ஏற்படுத்தும் வகையில் மனுதாரரின் மகனான முத்துராமனும், மனுதாரருடன் சேர்ந்து எதிர்மனுதாரர் மீது பொய்யாக புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் இந்த எதிர்மனுதாரர் உண்மையை நிலை நாட்டியதால் எதிர்மனுதாரரின் பெயர் நீக்கரவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், எதிர்மனுதாரர் 2 ஆம் தபசில் சொத்தில் 110 தென்னை மரக் கன்றுகளும், 15 வாழை மரக்கன்றுகளும் நட்டி விவசாயம் செய்து வந்தார். மீதி இடங்களில் , நெல் பயிரிட்டு வந்தார். இதற்காக கிடாரக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி எதிர்மனுதாரருக்கு பயிர் கடன் தந்துள்ளது. எதிர்மனுதாரர் வங்கிக் கணக்கில் இந்த கடன் தொகை வரவு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கி பாஸ்புத்தகம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த 3 தபசில் சொத்துக்களில் மொத்தம் ரூ.38,00,000/- வரை முதலீடு செய்து எதிர்மனுதாரர் அனுபவித்து வருகிறார். அவ்வாறு அனுபவம் செய்து வருகின்ற நிலையில் 06.04.2022 ஆம் தேதியில் இந்த மனுதாரரும் அவரது மகன்கள் முத்துராமன், மூர்த்தி மற்றும் காளியம்மாள் ஆகியோர் சேர்ந்து சேதப்படுத்த முயற்சி செய்தபோது இந்த எதிர்மனுதாரர் தட்டிக் கேட்டதால் மேற்படி நபர்கள் இந்த எதிர்மனுதாரரை அவதூராகவும், கீழ்த்தரமாகவும் பேசி கொலைமிரட்டல் விட்டனர். அதனால் ஆலங்குளம் காவல்நிலையத்தில் இந்த எதிர்மனுதாரர் 06.04.2021 ல் புகார் கொடுத்தார். அதற்கு தாமதமாக ரசீது வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேற்படி நபர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காததை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட மனுதாரர் மற்றும் அவரது உறவினர்கள் 28.04.2022 மற்றும் 29.04.2022 ஆகிய தேதிகளில் அத்துமீறி நுழைந்து தென்னை மரங்கள், வாழை மரங்களை வேரோடு பிடுங்கி எடுத்து பைப் லைன்களை உடைத்து திருடிச் சென்றுவிட்டார்கள். ரூ.1,31,000/- வரை சேதப்படுத்தி நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார்கள். இதுகுறித்து புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காததால் ஆலங்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனுச் செய்து, அதன் அடிப்படையில் நீதித்துறை நடுவர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரிக்கவும்,

அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவும் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 06.07.2022-ல் காவல்துறையில் இந்த எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பி ஆஜராக கூறியபோது இந்த எதிர்மனுதாரர் மட்டும் ஆஜராகி மனுதாரர் மற்றும் அவரது உறவினர்கள் ஆஜராகவில்லை. 23.03.2011 ஆம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதாக மேலே கூறியவாறு கூறுவது உண்மையல்ல. மனுதாரருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மகன்கள் உள்ளபோது முத்துராமனுக்கு 1, 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களது பங்கு சொத்துக்களை விற்பனை செய்ய ஒப்புக்கொண்டதாக கூறியிருக்கிறார். மனுதாரர் அவர்களுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எனவே இந்த பிரதிவாதிகளின் பங்கு சொத்துக்களை வாங்கும் விருப்பத்தினை இந்த மனுதாரர் இழந்திருக்கிறார். எனவே மனுதாரரின் மகன் சட்டப்படி வழக்குரை சொத்துக்களைப் பொறுத்து மனுதாரரின் தந்தையான மூக்கையாவின் முதல்நிலை வாரீசு இல்லை. எனவே வாங்கும் முன்னுரிமையை இந்த மனுதாரர் கோர முடியாது. எனவே எதிர்மனுதாரருக்கு முதல்நிலை வழக்கும், சமநிலை நோக்கும் இருப்பதால் எதிர்மனுதாரர் தாக்கல் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவை அனுமதித்து மனுதாரர் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், எதிர்மனுதாரரின் மேற்படி கூற்றை உறுதி செய்யும் விதமாக எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எம.சா.ஆ. 29 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் வாதிட்டிருக்கிறார்.

15. இந்த மனுக்களில் மனுதாரர், எதிர்மனுதாரர் மீதும், எதிர்மனுதாரர், மனுதாரர் மீதும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கிறார்கள். இரு தரப்பிலும் 1, 2 தபசில் சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனாரான மூக்கையா என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. 3 ஆம் தபசில் சொத்து மூதாதையர் சொத்து என்று மனுதாரர் கூறியிருப்பதை எதிர்மனுதாரர் மறுத்திருக்கிறார். மனுதாரர் தரப்பு பிரதான வாதமானது இந்து வாரீசுரிமைச் சட்டம் பிரிவு 22-ன் கீழ் இந்த மனுதாரர் கூட்டுரிமையாளர் என்பதன் அடிப்படையில் 1, 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக வாங்கும் முன்னுரிமை இருக்கிறது என்றும், இந்த பிரதிவாதிகள் அதனை வாய்மொழியாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்றும், 1, 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் மனுதாரரின் மகனுக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றும், மனுதாரர் 14 வருடங்களாக தபசில் சொத்துக்களில் பயிர் செய்து அனுபவித்து வருகிறார் என்றும், இதனை எதிர்மனுதாரர் இடையூறு செய்கிறார் என்பதும் ஆகும். இந்த எதிர்மனுதாரர் சமீபத்தில் கிரையம் பெற்றதன் அடிப்படையில் இடையூறு செய்கிறார். அவ்வாறு கிரையம் பெறுவதற்கு எதிர்மனுதாரருக்கு உரிமை இல்லை என்பதாகும்.

17. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கூறும் கிரைய ஒப்பந்தம் இந்து வாரீசுரிமைச் சட்டம் பிரிவு 22-ன் கீழ் முதல்நிலை வாரீசுகளுக்கு மட்டுமே கிடைக்கக் கூடியது என்றும், மனுதாரர் கூறும் கிரைய ஒப்பந்தம் மனுதாரரின் மகன்களில் ஒருவரான முத்துராமன் என்பவர் பெயரில் ஏற்பட்டதாக கூறியிருப்பதால் இந்த மனுதாரர் கிரைய முன்னுரிமையை பெறும் தகுதியை இழந்துவிட்டார். மேலும் ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்ட நிலையில் 1, 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள்

அவர்களுக்கு உரிமையான சொத்துக்களை மட்டுமே இந்த எதிர்மனுதாரரிடத்தில் கிரையம் ஏறப்டுத்தி மற்றும் அனுபவத்தை ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதாலும், இந்த எதிர்மனுதாரரே தபசில் சொத்துக்களில் லட்சக்கணக்கில் முதலீடு செய்து பயிர் செய்து தென்னை மரங்கள், வாழை மரங்கள் வைத்து அனுபவம் செய்து வருவதாலும் மனுதாரருக்கு உரிமையோ, அனுபவமோ இல்லை என்று வாதிடப்பட்டிருக்கிறது.

18. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆகியவை மனுதாரரின் தகப்பனாான மூக்கையா பெயரிலுள்ள கிரைய ஆவணங்களின் சார்பதிவாளர் நகல் ஆகும். ம.சா.ஆ.3 ஆனது மனுதாரரின் தகப்பனாரின் இறப்புச் சான்றிதழின் ஒளிப்பட நகல் ஆகும். ம.சா.ஆ.4 ஆனது மனுதாரரின் சகோதரரான ராமையா என்பவரின் இறப்புச் சான்றிதழின் ஒளிப்பட நகல் ஆகும். ம.சா.ஆ.5 ஆனது 23.03.2011 ல் மனுதாரரின் மகனுடன் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்மனுதாரர் தரப்பில் இந்த ஆவணம் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆவணத்தில் பத்திரம் வாங்கப்பட்ட தேதி மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மனுதாரர் கூறியவாறு 23.03.2011-ல் எழுதப்பட்டதா? என்ற சந்தேகம் எழுகிறது. மேலும் இது பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் என்பதால் தற்போது ஏற்றுக்கொள்ள இயலாது. ம.சா.ஆ.6 ஆனது மனுதாரர் மற்றும் மனுதாரரின் சகோதரர்கள் பெயரில் ஏற்பட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா ஆகும். ம.சா.ஆ. 7 மற்றும் ம.சா.ஆ.8 ஆகியவை மனுதாரரின் தகப்பனார் பெயரில் உள்ள பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா ஆகும். இந்த மூன்று பட்டாக்களும் 06.12.2021-ல் பெறப்பட்டிருக்கிறது. இந்த பட்டா வாயிலாக மனுதாரர் மட்டுமே தபசில் சொத்துக்களின் அனுபவத்தில் இருந்தார் என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.12 ஆக பதிவிறக்கம் செய்யப்பட்ட இரண்டு பட்டாக்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் எதிர்மனுதாரரின் பெயரும் மற்ற வாரீசுகளுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. மேலும் மனுதாரர் தரப்பில் கிஸ்து ரசீது தாக்கல் செய்திருந்தாலும், 05.07.2022 தேதியிட்ட எதிர்மனுதாரர் பெயரில் தனித்து வழங்கப்பட்ட கிஸ்து ரசீது எ.ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. மனுதாரர் தரப்பிலும், எதிர்மனுதாரர் தரப்பிலும் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதற்கான புகார் மனு ரசீது, நீதித்துறை நடுவர் நீதிமன்ற உத்தரவு போன்றவற்றை தாக்கல் செய்திருந்தாலும் இந்த மனுதாரர் 14 வருடங்களாக தபசில் சொத்தின் அனுபவத்தில் இருந்தார் என்பதை காண்பிப்பதற்கு ஒரே ஒரு கிஸ்து ரசீதை தவிர வேறு இல்லை. மேலும் மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் கிரையம் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்று இந்த மனுதாரரின் மகன் முத்துராமன் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரிலேயே தெரிவித்திருக்கிறார். மேலும் இந்த மனுதாரர் இந்து வாரீசுரிமை சட்டம் பிரிவு 22-ன் கீழ் உரிமை கோரியிருப்பதால் அந்த உரிமை மனுதாரருக்கு இருக்கிறதா? இல்லையா? என்பதை முழுமையான சாட்சிய விசாரணைக்குப் பின்பு தான் அறிய இயலும். தற்போது தபசில் சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் இருக்கிறது என்பதை ஆராயும்போது மனுதாரர் தரப்பில் மனுதாரரின் சகோதரிகள் மற்றும் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாக்களே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில்

எதிர்மனுதாரர், பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணங்கள் மனுதாரர் தரப்பிலும், எதிர்மனுதாரர் தரப்பிலும் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் மனுதாரர் தரப்பில் மனுத் தபசில் சொத்துக்களில் தென்னை, வாழை போன்றவற்றை பயிரிட்டும், நெல் சாகுபடியும் செய்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான புகைப்படங்கள் மற்றும் சிடி ஆகியவை எ.ம.சா.ஆ.17 மற்றும் எ.ம.சா.ஆ.18 ஆகக் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் எதிர்மனுதாரரால் இந்த மனு தபசில் சொத்துக்களில் பதிக்கப்பட்டுள்ள பி.வி.சி பைப்புகளை மனுதாரரும், அவரது உறவினர்களும் சேதப்படுத்தியதைக் காண்பிக்கக் கூடிய புகைப்படங்களும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இவற்றை மனுதாரர் தரப்பில் மறுக்கவில்லை. மேலும், மனுதாரர் தரப்பில் தாக்ல் செய்யப்பட்டுள்ள இடைக்கால மனுவில் தபசில் சொத்து குறித்த விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. அதுபோன்று, மனதாரர் தரப்பில் வாங்கும் முன்னுரிமை குறித்து கீழ்க்கண்ட முன் தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1) Hon'ble Orissa High Court Judgment in the case of Ganesh Chandra Pradhan ..vs.. Rukmani Mohanty and others on 31.03.1970

2) Hon'ble High Court of Calcutta in the case of Arati Das ..vs.. Bharati Sarkar and others on 18.07.2008

3) Hon'ble High Court of Calcutta in C.A.N. 11623 of 2017 in F.A.T. 661 of 2017 Sri Pabitra Kumar Maity ..vs.. Smt. Shyamali Manna and others

4) Hon'ble Supreme Court of India in Civil Appeal No.2553 of 2019 Babu Ra, ..vs.. Santokj Singh (deceaed) through his LRs and others

மேற்கண்ட முன்தீர்ப்புகளின் மூலம் இந்த மனுவின் மனுதாரருக்கு வாங்கும் முன்னுரிமை உள்ளதா- இல்லையா என்பது குறித்து தற்போது தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடீவு செய்கிறது. எனவே இரு தரப்பிலும் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களை ஆராயும்போது இந்த எதிர்மனுதாரரே தபசில் சொத்துக்களின் அனுபவத்தில் இருப்பது முதல்நிலையில் தெரியவருகிறது. எனவே முதல்நிலை வழக்கும் சமநிலை நோக்கும் எதிர்மனுதாரருக்கே இருக்கின்ற நிலையில் மனுதாரருக்கு அது இல்லாத நிலையிலும் மனுதாரருக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக் கூடியதில்லை என்றும், ஆனால் எதிர்மனுதாரருக்கு அவர் கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக் கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைநிலை மனு எண்.3/2022 மனுவானது அனுமதிக்கக் கூடியதல்ல என்றும், அதேநேரத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைநிலை மனு எண்.7/2022 மனுவானது அனுமதிக்கக் கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2-ற்கு தீர்வு காணப்படுகிறது.

**இடைநிலை மனு எண்.3/2022**

முடிவில், இம்மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இடைநிலை மனு எண்.7/2022**

முடிவில், இம்மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. மனு தபசில் சொத்துக்களில் மனுதாரர் அமைதியான முறையில் பயிர் செய்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரரோ அவரது வேலையாட்களோ, வகையாட்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பிழைதிருத்தப்பட்டு, 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**இடைநிலை மனு எண்.3/2022 ன் மனுதாரர் தரப்பு சாட்சி**

இல்லை

**இடைநிலை மனு எண்.3/2022 ன் மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 28.07.1983 | மனுதாரரின் தகப்பனார் மூக்கையாவிற்கு மாணிக்கம் வகையறா பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரையப் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| ம.சா.ஆ.2 | 17.11.1986 | மனுதாரரின் தகப்பனார் மூக்கையாவிற்கு மாணிக்கம் வகையறா பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரையப் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| ம.சா.ஆ.3 | 13.03.1997 | மூக்கையாவின் இறப்புச் சான்றிதழ் ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.4 | 12.10.2104 | ராமையாவின் இறப்புச் சான்றிதழ் ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.5 | 23.03.2011 | மனுதாரரின் மகன் முத்துராமன் என்பவரும், அசல் வழக்கின் 2 ஆம் பிரதிவாதி செல்வராஜ் என்பவரும் பிறப்பித்துக் கொண்ட ஒப்பந்தத்தின் அசல் |
| ம.சா.ஆ.6 | 06.12.2021 | பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா எண்.5709 |
| ம.சா.ஆ.7 | 06.12.2021 | பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா எண்.2166 |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.8 | 06.12.2021 | பதிவிறக்கம் செய்யப்பட்ட கணிணி பட்டா எண்.2901 |
| ம.சா.ஆ.9 | 27.02.2021 | தீர்வை ரசீது |
| ம.சா.ஆ.10 | - | உபயதரப்பார்களின் கொடி வழி ஜாபிதா |
| ம.சா.ஆ.11 | 26.10.2021 | ஆலங்குளம் காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் (குற்ற எண்.665/2021) |
| ம.சா.ஆ.12 | 22.02.2022 | எதிர்மனுதாரருக்கு, அசல் வழக்கின் 4 முதல் 7 பிரதிவாதிகள் பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரையப் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| ம.சா.ஆ.13 | 22.02.2022 | எதிர்மனுதாரருக்கு, அசல் வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரையப் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| ம.சா.ஆ.14 | 07.04.2022 | ஆலங்குளம் காவல்நிலையத்தில் மனுதாரர் கொடுத்துள்ள புகார் மனு நகல் |
| ம.சா.ஆ.15 | 10.04.2022 | ஆலங்குளம் காவல்நிலையத்தில் மனுதாரர் கொடுத்துள்ள புகார் மனுவிற்கான ரசீது |
| ம.சா.ஆ.16 | 22.04.2022 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு நகல் |
| ம.சா.ஆ.17 | 23.04.2022 | மனுதாரர், எதிர்மனுதாரர் மீது காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் |
| ம.சா.ஆ.18 | 07.07.2022 | மனுதாரர், எதிர்மனுதாரர் மீது காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் |
| ம.சா.ஆ.19 | 13,07.2022 | மனுதாரர், எதிர்மனுதாரர் மீது காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கான ரசீது |

**இடைநிலை மனு எண்.3/2022 ன் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**

இல்லை

**இடைநிலை மனு எண்.3/2022 ன் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 31.03.2021 | முத்தமிழ்ச்செல்வன் வகையறா எதிர்மனுதாரருக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள அனுபவ யாதாஸ்து அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 13.10.2019 | அசல் வழக்கின் 4 முதல் 7 பிரதிவாதிகள் மனுதாரரின் மகன் முத்துராமனுக்குப் பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஒப்பந்தப் பத்திரத்தின் அசல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.3 | 20.07.2021 | மனுதாரரின் பிரமாண உறுதிமொழி பத்திரத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.4 | 19.07.2021 | அசல் வழக்கின் 4 முதல் 7 பிரதிவாதிகள் எதிர்மனுதாரருக்குப் பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஒப்பந்தப் பத்திரத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.5 | 24.08.2021 | பைப்லைன் வாங்கியதற்கான ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ.6 | 24.08.2021 | எதிர்மனுதாரர் JCB இயந்திரம் வாங்கியதற்கான ரசீது |
| எ.ம.சா.ஆ.7 | 01.10.2021 | அசல் வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரருக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஒப்பந்தத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.8 | 20.0.2021 | ஆலங்குளம் காவல்நிலையக் குற்ற எண்.665/2021 முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 22.02.2022 | அசல் வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரருக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ப்பத்திரத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.10 | 22.02.2022 | அசல் வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரருக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.11 | 22.02.2022 | எதிர்மனுதாரருக்கு அசல் வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் பிறப்பித்துக் கொடுத்துள்ள பணப்பற்று ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ.12 | - | பட்டா எண்கள் 5709 மற்றும் 5799-ன் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.13 | 05.07.2022 | எதிர்மனுதாரர் பயிர் வருமானத்திற்கு செலுத்திய தீர்வை ரசீது |
| எ.ம.சா.ஆ.14 | - | எதிர்மனுதாரர் கிடாரக்குளம் தொடக்க கூட்டுறவுவேளாண்மை வங்கியில் கடன் பெற்றதைக் காட்டக் கூடிய வங்கி பாஸ்புத்தகத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.15 | 06.04.2022 | எதிர்மனுதாரர் ஆலங்குளம் காவல்நிலையத்தில் மனுதாரர் மீது கொடுத்துள்ள புகார் மனு நகல் |
| எ.ம.சா.ஆ.16 | 06.04.2022 | எதிர்மனுதாரர் ஆலங்குளம் காவல்நிலையத்தில் மனுதாரர் மீது கொடுத்துள்ள புகார் மனுவிற்கான ரசீது |
| எ.ம.சா.ஆ.17 | 28.04.2022 | எதிர்கோரிக்கை 2 ஆம்தபசில் சொத்திற்கான புகைப்படங்கள் 14 எண்ணிக்கை |
| எ.ம.சா.ஆ.18 | - | குறுந்தகடு |
| எ.ம.சா.ஆ.19 | 29.04.2022 | எதிர்மனுதாரர், மனுதாரர் மீது காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.20 | 06.05.2022 | எதிர்மனுதாரர், தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு நகல் |
| எ.ம.சா.ஆ.21 | 06.05.2022 | எதிர்மனுதாரர், தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு ரசீது |
| எ.ம.சா.ஆ.22 | 09.06.2022 | எதிர்மனுதாரர், ஆலங்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தனிப்புகார் மனு மற்றும் அதில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.23 | 03.07.2022 | ஆலங்குளம் காவல் ஆய்வாளர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அழைப்பாணை அசல் |
| எ.ம.சா.ஆ.24 | 19.03.2022 | எதிர்மனுதாரர் சாகுபடி செய்த நெல்லை விற்றதற்கான ரசீது |
| எ.ம.சா.ஆ.25 | - | முத்துசாமியின் இறப்பு சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.26 | 21.06.2022 | எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சாகுபடி அடங்கல் அசல் |
| எ.ம.சா.ஆ.27 | 07.03.2022 | எதிர்மனுதாரர் தென்னை, வாழை மரங்கள் நட்டுவதற்காக JCB மூலம் குழி தோண்டியதற்கான வாடகை ரசீது |
| எ.ம.சா.ஆ.28 | 02.04.1997 | மனுதாரர் மற்றும் அவரது சகோதரர்களுக்கிடையே பிறப்பித்துக் கொள்ளப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் ஒளி நகல் |
| எ.ம.சா.ஆ.29 | - | 1 வது தபசில் சொத்திற்கான வில்லங்கச் சான்று கணிணி நகல் |

**இடைநிலை மனு எண்.7/2022 ன் மனுதாரர் தரப்பு சாட்சி**

இல்லை

**இடைநிலை மனு எண்.7/2022 ன் மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

இல்லை

**இடைநிலை மனு எண்.7/2022 ன் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**

இல்லை

**இடைநிலை மனு எண்.7/2022 ன் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 01.03.2005 | எதிர்மனுதாரருக்கு ஒரு ராஜ் என்பவர் பிறப்பித்துக் கொடுததுள்ள ஒத்தி யாதாஸ்து |
| எ.ம.சா.ஆ.2 | 22.07.2021 | எதிர்மனுதாரருக்கு ஆலங்குளம் மண்டல துணை வட்டாட்சியர் வழங்கியுள்ள மேலெழுத்து |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.3 | 13.04.2022 | எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக ஆலங்குளம் வட்டாட்சியரிடம் கொடுத்த புகார் மனு நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 26.05.2022 | ஆலங்குளம் வட்டாட்சியர் பிறப்பித்துள்ள அவசரக் குறிப்பாணை |

(ஒம்) ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

-------------------------------------------------------------------------------

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.3/2022
மற்றும்
இடைநிலை மனு எண்.7/2022
அதன்
அசல் வழக்கு எண்.120/2022
உத்தரவு (நேரிய)
நாள்: 16.09.2022

-------------------------------------------------------------------------------